செய்தி வெளியீடு எண்:530 நாள்: 10.08.2017

# செய்தி வெளியீடு

மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் டாக்டர் V. சரோஜா அவர்கள் தலைமையில் இன்று தலைமைச் செயலகத்தில் மாற்றுத் திறனுடையோர் சங்கங்களின் கூட்டு இயக்கம் சார்பாக அளித்த பல்வேறு கோரிக்கைகள் குறித்து கூட்டம் நடத்தப்பட்டு கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

- மாதாந்திர உதவித் தொகையை, பயோமெட்ரிக் பட்டுவாடா முறைக்கு மாற்றாக விரும்பும் பயனாளிகளுக்கு ATM Card வழங்குவதற்கும், மேலும் தனியாக வங்கிக் கணக்கு துவங்க வலியுறுத்தப்படாது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

- தற்போது பல்வேறு மாவட்டங்களில் நிலுவையில் உள்ள 15000 தகுதி வாய்ந்த ஓய்வூதிய விண்ணப்பதாரர்களுக்கு மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை விரைவில் அனுமதித்து ஆணை வழங்கப்படும்.

- மாதாந்திர ஓய்வூதிய முன்வரிசைப் பட்டியலை (Seniority list) அனைவரும் பார்க்கும் வண்ணம் Onlineல் வெளியிட வருவாய்த் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது வருவாய்த் துறையில் உள்ள உதவித் தொகை அனுமதிக்கும் நடைமுறையினை மேலும் எளிதாக்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

- அனைத்து மாவட்டங்களிலும் வட்டார அளவில் முகாம்கள் நடத்தி மாற்றுத் திறனாளிகளுக்கு அடையாள அட்டை (Unique disability identity card) வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- அனைத்து மாவட்டங்களிலும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும்.

- 40 முதல் 74 சதவிகிதம் வரை உள்ள காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோருக்கும் உதவித் தொகை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக வருவாய் நிர்வாக ஆணையரகம் மூலம் மாவட்ட ஆட்சியர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்படும்.

- 75 சதவிகிதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட பார்வையற்றோர், காது கேளாதோர் மற்றும் மன நோய் உள்ளவர்களுக்கும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மூலம் பராமரிப்பு உதவித் தொகை வழங்குவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

- மாதாந்திர உதவித் தொகை பெறுவதற்கு வருமான வரம்பாக ரூ.5 இலட்சம் ஆக வரையறுக்கவும் மற்றும் 18 வயதிற்கு கீழ் உள்ள தகுதியான மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை வழங்குவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், அரசு முதன்மைச் செயலர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அரசு முதன்மைச் செயலர், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், இயக்குநர், சமூகப் பாதுகாப்புத் திட்டம், வருவாய் நிர்வாக அலுவலகம் மற்றும் மாற்றுத் திறனுடையோர் சங்கங்களின் கூட்டு இயக்கம் சார்பாக திரு. தீபக், திரு. நம்புராஜன், திரு. மனோகரன், திரு. ஜமால் அலி மற்றும் இதர கூட்டு இயக்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**